**தலைப்பு 253 – ஓய்வூதிய திணைக்களம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

ஓய்வூதிய திணைக்களத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2019 யூலை 31 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் திணைக்களத்தித்திற்குரிய வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2019 யூன் 20 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஓய்வூதிய திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் திணைக்களத்தினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்துதல் வேண்டியதுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(ஈ)பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்கள் நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் தேவைப்பாடு இல்லாதிருந்தமைால் மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாக கூறுவதற்கு முடியாதுள்ளது. மேலம் இதன் காரணமாக முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்படவில்லை.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 நிதிச் செயலாற்றல் கூற்று

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 2018 ஆம் ஆண்டிற்காக 20.04.01.000 வருமானத் தலைப்பில் சேகரிக்கப்பட்ட வருமானம் ரூபா 870,380 குறைத்து நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப் பட்டிருந்தது. | திறைசேரி அச்சிட்டுக் குறிப்புக்களில் வருமானம் சரியாக நிதிக்கூற்றுக்களில் குறிப்பிடப்பட வேண்டும். | 2018 ஆம் ஆண்டிற்காக திறைசேரி இறுதி கணக்கு கூற்று 2019.02.12 ஆந் திகதி வழங்கப்பட்டிருந்ததுடன் இறுதிக் கணக்குகள் தயாரிக்கும் போது 2019.02.05 ஆந் திகதிய திறைசேரிக் கூற்றினை அடிப்படையாக கொண்டி ருந்தமைால் மத்திய அரசிற்கு மொத்த வருமானம் ரூபா 870,380 ஆல் குறை வடைந்துள்ளது. |
| (ஆ) | வேறு திணைக்களமொன்றினால் திணைக்களத்திற்காக செலவிடப்பட்ட செலவினம் ரூபா 34,533,914,542 ஆக இருந்த போதும் நிதிக்கூற்றுக்கிளன் பிரகாரம் அச்செலவினம் ரூபா 33,407,328,729 என காண்பிக்கப் பட்டமையால் அச்செலவினம் ரூபா 1,126,585,813 ஆல் குறைத்துக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | வேறு திணைக்களம் மற்றும் அமைச்சின் மூலமாக திணைக்களத் திற்காக செலவிடப்பட்ட செலவினம் உள்ளடக்கப்பட்டு சரியான வருடாந்த செலவினம் கணக்கீடு செய்யப்பட வேண்டும் | ஏற்றுக்கொள்கின்றேன். பிரதேச செயலகத்தினால் நடப்பாண்டிற்குரிய மற்றும் முன்னைய ஆண்டுகளுக்கு செலுத்தப்படாத ஓய்வூதி யத்தை திணைக்களத்திற்கு அனுப்புவதால் ஆண்டிற்குரிய சரியான பெறுமதியை கண்டு பிடிப்பதற்கு சிக்கலாக உள்ளது. இது தொடர்பாக திறைசேரியின் செயற்பாட்டுத் திணைக்களத்தின் ஆலோசனை பெறப்பட்டு 2019 ஆம் ஆண்டில் சீராக்கம் செய்ய நவடிக்கை எடுக்கப்படும். மேம்படத்தல் |

### 1.6.2. நிதி நிலைமைக் கூற்று

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிதி நிலைமைக் கூற்றில் ஆதனங்கள் பொறிகள் மற்றும் உபகரணங்கள் ரூபா 494,744 ஆல் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | நிதிக்கூற்றுக்களில் சரியான பெறுமதி கணக்கீடு செய்யப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றேன். 2017 ஆம் ஆண்டின் போது மீண்டெழும் செலவினத்திற்கு உள்ளடகக்ப்பட்டிருந்த ரூபா 494,197.00 ஆன சொத்துக் கொள்வனவு நிலையான சொத்துக்கள் பதிவேட்டிற்கு உட்படுத்தப்பட்ட போதும் 2018 நிதியல்லாத சொத்துக்கள் கூற்றில் உள்ளடக்கப் பட்டிருக்கவில்லை. |

### 1.6.3 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பான இணக்க கூற்று

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பண கூற்றின் பிரகாரம் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வேலை இடைநறுத்தப்பட்டுள், சேவையை விட்டுச்சென்றுள்ள மற்றும் இடமாற்றம் சென்ற உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய நிலுவை கடன் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 3,290,000 ஆக இருந்தது. அந்நிலுவை கடன் மீதிகளுக்கு இடையே 5 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக இருந்துவரும் 14 உத்தியோகத்தர் களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய நிலுவைக் கடன் மீதி ரூபா 564,841 ஆக இருந்தது. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | உத்தியோகத்தரின் தற்போதைய தேவையான தகவல் காணப்படாமை, உத்தியோகத்தர் அறிவூட்டுதல் தொடர்பான தகவல்கள் காணப்படாமை, கடன் மீதி தீர்வு செய்யுமாறு அனுப்பிய கடிதங்கள் மீள் பெறுவனவுகள் போன்ற காரணங்களால் கடன் மீதி அறவீடு தாமதமடைந் திருந்ததுடன் மீதிகள் தொடர்பாக சட்டரீதியான நடவடிக்கை எடுப்பதற்கு அனுப்பிவைக்கப்பட்டு உள்ளது. |

### 1.6.4 கணக்காய்விற்காக சான்றுகளின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| வருமானத்திலிருந்து மீள் கொடுப்பனவு பெறுமதியான ரூபா 588,412 இற்காக வரவு அறிவித்தல் வழங்கியதாக சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் வரவு அறிவித்தல்கள் கொண்டு வரப்பட வேண்டும். | வருமானத்திலிருந்து மீள் கொடுப்பனவு பரிந்துரைக்கப்பட்டு அனுப்பும் சந்தர்ப்பத்தில் வரவு அறிவித்தல் அனுப்புவது தொடர்பாக எழுத்து மூலமாக அறிவிப்பதுடன் வருமானத்திலிருந்து மீள் கொடுப்பனவு பரிந்துரைக்கும் போது வரவு வைப்பதற்குரிய சகல தகவல்களும் அதில் உள்ளடக்கும் வகையில் மீண்டும் நினைவூட்டல் வழங்கப்பட்டது. |

### 1.6.5 கணக்கீட்டு உத்தியோகத்தரால் மேற்கொள்ளப்பட வேண்டிய உறுதிப்படுத்தல்கள்

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவின் பிரகாரம் கணக்கீட்டு உத்தியோகத்தரால் கீழே காட்டப்பட்ட விடயங்கள் தொடர்பாக சான்றுறுதிப்படுத்த வேண்டிய போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | திணைக்களத்தின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | திணைக்கள நிதிக் கட்டுப்பாட்டிற்காக செயற்திறனான உள்ளக கட்டுப்பாட்டு முறைமை தயாரித்து பேணிச் செய்யப்படுவதாக கணக்கீட்டு உத்தியோகத்தரால் உறுதிப்படுத்த வேண்டியதுடன் அம் முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வு செய்வது அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் இடம் பெற வேண்டிய போதிலும் அம் மீளாய்வு எழுத்து மூலம் மேற்கொள்ளப்பட்டு அதன் பிரதியொன்று | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | ஓய்வூதிய கொடுப்பனவு செயற்பாடு தொடர்பாக மீளாய்வொன்ற மேற்கொண்டு உள்ளக கட்டுப்பாட்டு முறைமையில் அத்திவசிய மாற்றங்கள் மேற்கொண்ட போதும் அத்தகல்கள் எழுத்து மூலம் அறிவிக்கப்பட வில்லையென அறிய தருகின்றேன். |

| | | | |
|---|---|---|---|
| | கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்க வேண்டியிருந்த போதிலும் அவ்வாறான மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்டதற்கான கூற்று கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஆ) | கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு தேவையானதன் பிரகாரம் குறித்த காலப்பகுதியில் சகல கணக்காய்வு ஐய வினாக்களுக்கு பதில் வழங்குவதாக இடம்பெறுவதாக பிரதான பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தால் உறுதிப் படுத்தப்பட வேண்டிய போதிலும் 2018 ஆம் ஆண்டிற்காக 8 கணக்காய்வு ஐயவினாக்கள் சமர்ப்பிக்கப்பட்டு 2019 செப்தம்பர் 30 இல் உள்ளவாறு 03 மாதங்கள் முதல் 11 மாதங்கள் வரையான காலம் கடந்திருந்த போதிலும் பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை. | - மேற்படி - | மாவட்ட செயலகம், பிரதேச செயலகம் மற்றும் ஓய்வூதிய திணைக்களம் மற்றம் தொடர்புடைய ஏனைய அரச நிறுவனங்களிடமிருந்து பதிலும் தெளிவுபடுத்தல்களும் வழங்கப்பட வேண்டியுள்ளதால் காலதாமதமொன்று காணப்படுவதாக ஏற்றுக்கொள்கின்றேன். |

**1.6.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடன் இணங்காமை**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணங்காமை | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை 170(2)(அ), (ஆ),(இ),(ஈ), (உ) | 2018 ஆம் ஆண்டின் போது நடாத்தப்பட்ட விழாக்களுக்காக 15 தனியார் நிறுவனங்களிலிருந்து திணைக்களத்திற்கு கிடைத்த ரூபா 5,991,000 தொகை 2019 யூலை 8 ஆந் திகதி வரை பொது வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. | வெளி நிறுவனங் களிலிருந்து கிடைக்கும் நன்கொடைகள் தொடர்பாக நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் | ஓய்வூதியத் திணைக்களத்துடன் கைகோர்த்துள்ள தனியார் துறை நிறுவனங்களால் வழங்கப்பட்டிருந்த அனுசரணை மூலம் 09 தேசிய விழாக்களுக்காக ரூபா 2,365,000 தொகை வழங்கப் பட்டிருந்ததுடன் எஞ்சிய பணம் திணைக்களத்தின் நோக்கத்தினை நிறை வேற்ற ஈடுபடுத்தப் படவுள்ளது |

(ஆ) ஓய்வூதிய பணிப்பாளர் நாயகத்தின் சுற்றறிக்கை

| | | | | |
|---|---|---|---|---|
| (i) | 2014 ஏப்ரல் 07 ஆந் திகதிய 01/2011 ஆம் இலக்க (திருத்திய) சுற்றறிக்கை | ஒவ்வொரு பிரதேச செயலகத்தினாலும் ஓய்வூதியக் கொடுப்பனவு செயற்பாட்டை முறைப்படுத்துவதற்காக முறையான கட்டுப்பாட்டுக் கணக்கொன்று பேணிச்செல்ல வேண்டிய போதிலும் தெரிவுப் பரிசோதனையின் பிரகாரம் 5 பிரதேச செயலனகங்களில் அவ்வறான கட்டுப்பாட்டுக் கணக்கொன்று பேணப்பட்டிருக்கவில்லை . | ஒவ்வொரு பிரதேச செயலகத்தினாலும் முறையான கட்டுப்பாட்டுக் கணக்கொன்று தயாரிக்கப்பட்டு ஓய்வூதிய செலவினங்களின் சரியான தன்மை உறுதிப்படுத்த வேண்டும் | சகல ஓய்வூதியக் கொடுப்பனவு மற்றம் திருத்த செயற்பாடு மததிய மயப்படுத்தப்பட்ட தரவு முறையொன்று மேற் கொள்ளப்பட்டுள்ளதால் புறம்பாக கட்டுப்பாட்டுக் கணக்கிணை பேணிச் செல்லல் சிரமமாக இருக்கவில்லை. அவ் வேறுபாடு இனங்காணப் பட்டு கட்டுப்பாட்டுக் கணக்குகளை தயாரிப்பது ஒவ்வொரு பிரதேச செயலகத்தினதும் பொறுப்பாகும். |
| (ii) | 2013 திசெம்பர் 03 ஆந் திகதிய 06/2013 ஆம் இலக்க சுற்றறிக்கை | செலுத்தப்படாத ஓய்வூதியம் குறித்த மாதத்தின் பின்னர் ஓய்வூதிய திணைக்களத்திற்கு அனுப்ப வேண்டிய போதிலும் 04 பிரதேச செயலகங்களால் ரூபா 4,567,674 தொகைய பணத்தை பொது வைப்புக் கணக்கில் 02 மாங்கள் முதல் 12 மாதங்கள் வரைநிறுத்திவைத்து இருந்ததன் பின்னர் அனுப்பி வைக்கப்பட்டிருந்தது, | செலுத்தப்படாத ஓய்வூதியம் ஓய்வூதிய திணைக்களத்திற்கு விரைவில் பெற்றுக் கொள்வதற்கு வேலைத் திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டும் | செலுத்தப்படாத ஓய்வூதியத்தில் பொது வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்படாமல் ஓய்வூதிய திணைக்களத்திற்கு அனுப்பி வைக்குமாறு ஆலோசணை வழங்கியருந்த போதும் அந்த ஆலோசணைகளுக்கு முரணாக அலுவலக செலவினங்களுக்காக பணத்தை பயன்படுத்தும் நடைமுறை காணப்பட்டது. |
| (iii) | 2016 ஏப்ரல் 27 ஆந் திகதிய 03/2016 ஆம் இலக்க சுற்றறிக்கை மற்றும் 2015 பெப்ரவரி 11 ஆந் திகதிய 05/2015 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கை | ரூபா 3,500 மாதாந்த இடைக்கால கொடுப்பனவு 2016 சனவரி 01 ஆந் திகதியின் பின்னர் ஓய்வுபெற்ற ஓய்வூதியக்காரருக்கு உரித்தாகாத போதும் தெரிவுப் பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்டதன் பிரகாரம் அதற்கு முரணாக வரகாபொல | நிதிப்பிரமாணம் 103 மற்றும் 104 இன் பிரகாரம் செயற்பட வேண்டும். | பதில் வழங்கப்படவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | | பிரதேச செயலத்தின் ஓய்வு பெற்ற மூன்ற உத்தியோகத்தர்களுக்கு மேற்குறித்த படிகளாக ரூபா 261,991 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | | |
| (iv) | 2018 யூலை 17 ஆந் திகதிய 9/2008 ஆம் இலக்க (திருத்திய II) சுற்றறிக்கை | சேவைக்காலத்தை பூர்த்தி செய்யாத ஓய்வூதியம் பெறுவோருக்கு செலுத்தப்படும் அங்கவீன ஓய்வூதியக் கொடுப்பனவு நிறுத்தப்பட்டு 59 ஆவது பிரிவின் கீழ் செலுத்தப்படும் ஆரம்ப சம்பளத்துடன் அங்கவீன ஓய்வூதிய தரவு முறைமையில் சேர்த்துக் காண்பிக்கப்பட வேண்டிய போதிலும் எனினும் வரகாபொல மற்றும் அளவ்வ பிரதேச செயலகங்களில் ஓய்வூதியத்துடன் ஒன்றிணைக்கப் படவில்லையென அவதானிக்கப்பட்டது. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 59 ஆவது குறியீட்டின் கீழ் சேவைக் காலப்பகுதியில் 10 ½ ஆண்டுகளுக்கு குறைந்த யுத்த வேலைகளில் அங்கவீனமுற்ற இராணுவ உத்தியோகத்தர்களுக்கு சேவ ஓய்வூதியம் ஆரம்பத்தின் போது 6/42 குறியீட்டின் கீழ் அங்கவீன ஓய்வூதியம் வழங்கப்பட்டுள்ள வழங்கப்படாதவர்கள் தேசிய அடையாள அட்டை இலக்கத்தினால் அல்லது வங்கி கணக்கு இலக்கத்தினால் இனங்காண முடியாத நிலைமையில் காணப்படுகின்றது. அவ்வாறான சந்தர்ப்பங்களை இனங்காண நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. 59 ஆவது குறியீட்டின் கீழ் செலுத்தப்படும் ஓய்வூதியத்திற்கு எவ்வித படிகளும் செலுத்தப்படாததுடன் அது ஓய்வூதியம் பெறுபவர் 55 வயதாகும் போது 69 59 ஆவது குறியீட்டின் கீழ் மாற்றம் பெறுவர். |
| (ஆ) | 2011 ஆகஸ்ட் 15 ஆந் திகதிய 1719/3 ஆம் இலக்க விசேட வர்த்தமானி அறிவித்தல் | பிறப்பில் முழு வலது குறைந்தோரல்லாத நபர்கள் 05 ஆண்டுகளுக்கு ஒருமுறை மருத்துவ சபைக்கு அனுப்பி | 05 ஆண்டுகளுக்கு ஒருமுறை மருத்துவ சபைக்கு அனுப்பி வலது குறைந்தோராக உறுதிப்படுத்தி | வலது குறைந்தோர் ஓய்வூதியம் பெறும் பிறப்பிலே வலது குறைந்தோரல்லாத ஓய்வூதியம் பெறுவோர் |

| | | |
|---|---|---|
| வைக்கப்பட வேண்டிய போதிலும் தெரிவுப் பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்டதன் பிரகாரம் 5 பிரதேச செயலகங்களின் அவ்வாறான அவ்வாறான நபர்கள் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் மருத்துவ சபைக்கு அனுப்பி வைக்கப்பட்டிருக்க வில்லை. | கொடுப்பனவு செய்யப்பட வேண்டும். | தொடர்பாக வல.03 ஆம் மாதிரியில் கிராம சேவையாளர்கள் மூலம் தகவல்கள் பெற்றுக் கொண்டு தேவையான நடவடிக்கை எடுப்பதாக பிரதேச செயலாளர்கள் அறிவித்துள்ளனர். |

### 1.6.7 மோசடி தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | சிவில் மற்றும் விதவையாக 02 ஓய்வூதியம் பெற்று வந்து மரணித்த ஓய்வூதிய உத்தியோகத்தருக்கு மரணித்து 55 மாதங்கள் வரை மரணிக்கும் போது பெற்றுக்கொண்டிருந்த ஓய்வூதிய வங்கி கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது. அவ்வாறு செலவு வைக்கப்பட்ட தொகையில் ரூபா 2,696,303 ATM காட் பயன்படுத்தப்பட்டு மரணித்தவரின் மகனால் பெற்றுக் கொள்ளப்பட்டிருந்தது. இதில் ரூபா 308,052 தொகை அவரால் பின்னர் திணைக்களத்திற்கு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த போதும் எஞ்சிய ரூபா 2,388,251 தொகையை 2019 யூன் 30 ஆந் திகதி வரை அறவிடப்பட்டிருக்க வில்லை. | நிதிப்பிரமாணம் 101 முதல் 112 இன் பிரகாரம் குறித்த ஓய்வூதிய சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்பட்டு மோசடியாக பெற்றுக்கொண்ட பணத்தை மீள பெற்றுக்கொள்ள சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இம்மரணம் செயலகத்திற்கு அறிக்கையிடாத காரணத்தினால் இக்கூடுதலான கொடுப்பனவு இடம் பெற்றுள்ளது. ஓய்வூ பெற்றவரின் குடியிருப்பு சான்றதழைக் கோருவதன் மூலம் இம்மரணம் கண்டறியப்பட்டதுடன் கூடுதலாக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த ரூபா 2,696,303 மோசடி செய்த நபரால் ரூபா 308,052 கொடுப்பனவு செய்யப்பட்டுள்ளது. குறித்த பிரதேச செயலகம் மற்றும் பிரதேச செயலாளர்களால் நி.பி 104(1) (ஆ) பிரகாரம் பரிசோதனை செயற்பாடுகளும் குறித்த நபருக்கு எதிராக சட்ட நடவடிக்கையும் எடுக்கப்பட்டுள்ளதாக அறிய தருகின்றேன். |
| (ஆ) | 2013 நவம்பர் 07 ஆந் திகதி மரணித்த உத்தியோகத்தர் இறக்கும் சந்தர்ப்பத்தில் பெற்றுவந்த ஓய்வூதியம் மரணித்து 29 மாத காலமாக ரூபா 582,423 உத்தியோகத்தரின் வங்கிக் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது. அவ்வப் போது ATM அட்டை பயன்படுத்தப்பட்டு இக் கணக்கிலிருந்து பணம் பெற்றுக் கொள்ளப்படாதிருந்ததுடன் 2019 | குறித்த ஓய்வூதிய சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்பட்டு மோசடியாக பெற்றுக்கொண்ட பணத்தை மீள பெற்றுக்கொள்ள சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இக்கூடுதலான கொடுப்பனவு மோசடியாக பெற்றக்கொள்ளப்பட்டதாக 2016 ஆம் ஆண்டின் பேர்த குடியிருத்தல் சான்றிதழ் கோரல் மூலம் வெளிப்படுத்தப்பட்டிருந்தது. இம்மோசடியை மேற்கொண்ட நபர் யாரென இதுவரை வெளிப்படுத்த முடியாமல் இந்ததுடன் வங்கியினால் குறித்த ATM கெமறா காட்சிகளை வழங்காமை |

| | | | |
|---|---|---|---|
| | யூன் 30 ஆந் திகதி வரை எடுக்கப்பட்டிருந்த ரூபா 581,916 இற்குரிய தரப்பினரிடமிருந்து அறவிடப்பட்டிருக்கவில்லை. | | காரணமாக இம்மோசடி தொடர்பாக எதிர்வரும் நடவடிக்கைகளை எடுப்பதில் தாமதம் அடைந்துள்ளதுடன் எதிர்காலத்தில் இது தொடர்பாக சட்ட நடவடிக்கைகளை எடுப்பதற்கு தீர்மானிக்கப் பட்டுள்ளதாக பிரதேச செயலாளரால் அறிவிக்கப்பட்டிருந்தது. |
| (இ) | 2 பிரதேச செயலகங்கள் மூலம் தற்காலிக மற்றும் நிரந்தரமாக இருண்டு ஓய்வுதியங்கள் 1991 முதல் 2016 பெப்ரவரி வரை 20 ஆண்டுகளாக பெற்றுக் கொண்டிருந்தார். இவ்வாறு ஒரு பிரதேச செயலகத்தின் மூலம் கூடுதலாக பெற்றுக்கொர்ணட தொகை ரூபா 1,872,387 ஆக இருந்ததுடன் 2016 பெப்ரவரி 10 ஆந் திகதி முதல் ஓய்வுதியக் கொடுப்பனவு நிறுத்தப்பட்டிருந்த போதும் கூடுதலாக கொடுப்பனவு செய்த பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை | குறித்த ஓய்வூதிய சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்பட்டு மோசடியாக பெற்றுக் கொண்ட பணத்தை மீள பெற்றுக் கொள்ள சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இந்த ஓய்வூதிய மோசடி தொடர்பாக கம்பஹா சிரேஷ்ட் பொலிஸ் அத்தியட்சகர் அலுவலகத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட முறைப்பாடுகளின் பிரகாரம் வழக்கு விசாரிக்கப்பட்டு வருகின்றது. எவ்வாறாயினும் ஓய்வூதியம் பெறுவோனின் ஓய்வூதிய கொடுப்பனவு மஹர பிரதேச செயலகத்தினால் நிறுத்தப்பட்டுள்ளது. |
| (ஈ) | ஓய்வூதிய தரவு முறைமையில் ஓய்வூதியம் பெறுவோரின் தேசிய அடையால அட்டை இலக்கத்திற்குப் பதிலாக மகளின் அடையாள அட்டை இலக்கை இட்டு ஓயூதியம் பெறுவோர் மரணித்து 86 மாதங்கள் கடக்கும் வரை இறந்த தாயின் ஓய்வூதியச் சம்பளமாக ரூபா 1,562,470 தொகை மகளினால் தவறாக பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. இவ்வாறு கூடுதலாக செலுத்திய பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | குறித்த ஓய்வூதிய சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்பட்டு மோசடியாக பெற்றுக் கொண்ட பணத்தை மீள பெற்றுக் கொள்ள சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | ஓய்வூதிய பணிப்பாளர் நாயகத்தினால் மாவட்ட செயலகத்தினால் தொடர்புபடுத்தி நிதிப்பிரமாணம் 104 இன் பிரகாரம் பரிசோதனை மேமற்கொள்ளப்பட்டு அறிக்கை சமர்ப்பிக்குமாறு சட்டரீதியான நடவடிக்கை எடுக்குமாறு அறிவூட்டப்பட்டு கடிதமமொன்று வழங்கப்பட்டுள்ளது. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 வருமான முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | சமூக பாதுகாப்பு பங்களிப்பு பணம் (மாகாண சபை) மற்றும் நிலுவை பங்களிப்பின் பிரகாரம் குறிப்பாக இனங்காணக்கூடிய வகையில் பொருத்தமான தரவு முறைமையொன்று தயாரிக்கப்படவில்லை. அதன் காரணமாக மீளாய்வாண்டின் போது இந்தத் தலைப்பிற்காக சேகரிக்கப்பட்ட ரூபா 8,683 தொகையான வருமானம் ஆண்டிற்கான வருமானப் பெறுவனவுகள், நிலுவை வருமான கிடைப்பனவாக ஒதுக்கப்பட்டு இனங்காண்பதற்கு தேவையான பிரகாரம் ஒதுக்கீடுகளைச் செய்வதற்கும் முடியாதிருந்தது. | பங்களிப்பாளரின் பங்களிப்பு செலுத்துதல் தொடர்பான தரவு முறைமையொன்று பேணிச்செல்லப்பட வேண்டும். | சகல அரசாங்க நிறுவனங்களிலும் உத்தியோகத்தரின் மாதாந்த விதவைகள், அநாதைகள், பங்களிப்புப் பணம் அறவிடும் அறிக்கை வெவ்வேறாக பேணிச் செல்வது நடைமுறையில் சிக்கலான செயற்பாடாகும். |
| (ஆ) | விதவைகள், அநாதைகள் பங்களிப்பு செலுத்துவதற்காக காசோலைகள் அடுத்து வரும் மாதத்தின் 05 ஆம் திகதிக்கு முன்னர் பெறப்பட வேண்டியிருந்த போதிலும் அந்தக் காசோலைகளைப் பெற்றுக் கொள்ளும் போது 70 நாட்கள் முதல் 184 நாட்கள் வரையான தாமதம் அவதானிக்கப்பட்டது. மாகாண சபையினால் சகல அலுவலகங்களினதும் பங்களிப்புப் பணத்திற்காக ஒரு காசோலை விநியோகிக்கப்படுமாயின் ஒவ்வொரு மாதமும் அறவிடல்கள் அடுத்து வரும் மாதத்தின் 15 ஆம் திகதிக்கு முன்னர் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டிய போதிலும் அந்தப் பணம் 10 முதல் 54 நாட்கள் வரையான தாமதத்தைக் காணக்கூடியதாக இருந்தது. | குறித்த திகதியில் பங்களிப்புப் பணத்தை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | அடுத்த மாதத்தின் 20 ஆம் திகதி வரை காலம் வழங்கப்பட்டிருந்ததுடன் தாமதமான ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் தொலைபேசி அழைப்பின் மூலமும் கடிதங்கள் மூலமும் உரிய பணத்தைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அவ்வாறே இந்தப் பணம் உரிய பிரகாரம் திணைக்களத்திற்கு அனுப்புவதற்கும் ஏனைய சகல அரசாங்க நிறுவனங்களினதும் பொறுப்பாகும். |
| (இ) | காசோலை மூலம் பங்களிப்புப் பணம் செலுத்துகின்ற 03 | திருப்பி அனுப்பப்பட்ட | ஏற்றுக்கொள்கின்றோம். அந்த |

| | | |
|---|---|---|
| நிறுவனங்களினால் சமர்ப்பிக்கப்பட்ட ரூபா 573,809 பெறுமதியான 06 காசோலைகள் பல்வேறு காரணங்களின் அடிப்படையில் 2018 ஆம் ஆண்டின் போது மீளத் திருப்பி அனுப்பப்பட்டிருந்த போதும் 2019 மே 06 ஆம் திகதி வரையில் ஒரு வருடத்திற்கு மேற்பட்ட காலம் கடந்திருந்த போதும் அந்த பங்களிப்புப் பணம் மீண்டும் அறவிடப்பட்டிருக்கவில்லை. | காசோலைகள் தாமதமின்றி பெற்றுக்கொள்ளப் படல் வேண்டும். | காசோலைகள் தொடர்பாக தொடர்ச்சியாக உரிய நிறுவனங்களிடம் விசாரணை செய்யப்பட்ட போதிலும் இது வரையிலும் பதில் கிடைத்திருக்கவில்லை . |

## 2.2 செலவின முகாமைத்துவம்

-------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) மீளாய்வாண்டிற்காக 04 மீண்டெழும் செலவின விடயங்களினதும், 02 மூலதன செலவின விடயங்களினதும் மொத்த தேறிய நிதி ஏற்பாடுகளில் முறையே ரூபா 1,202.13 மில்லியன் தொகை மற்றும் ரூபா 1.21 மில்லியன் தொகையாக இருந்ததுடன் அந்த செலவினங்களுக்குரிய மொத்த செலவினங்கள் முறையே ரூபா 156.99 மில்லியன் மற்றும் 0.88 மில்லியன் ஆக இருந்தன. அதன் பிரகாரம் செலவின விடயங்களுக்குரிய சேமிப்பு முறையே ரூபா 1,045.13 மில்லியன் தொகை மற்றும் ரூபா 0.32 மில்லியன் ஆக இருந்தன. இதில் ஒரு செலவின விடயத்தின் சேமிப்பு வீதம் 100 சதவீதம் மற்றும் பெறுமதி ரூபா 1,000 மில்லியன் ஆக இருந்ததுடன் மிகுதி 05 செலவின விடயங்களினதும் சேமிப்பு தேறிய நிதி ஏற்பாட்டில் 17.5 சதவீதம் முதல் 28.5 சதவீதம் வரையான வீச்சினைக் கொண்டிருந்தது. | நிதிப் பிரமாணம் 50 இன் பிரகாரம் சரியாக செலவினம் மதிப்பீடு தயாரிக்கப்பட வேண்டும். | பதில் வழங்கப்படவில்லை |
| (ஆ) மீளாய்வாண்டில் 06 செலவின விடயங்களுக்காக ஒதுக்கப்பட்ட ரூபா 138,117 மில்லியன் தொகையான நிதி ஏற்பாட்டின் கீழ் மேலதிகமாக நிதிப்பிரமாணம் 66 மற்றும் 69 இன் கீழ் தேறிய மாற்றல்கள் ரூபா 374.73 மில்லியன் தொகை குறைக்கப்பட்டதன் | நிதிப் பிரமாணம் 50 இன் பிரகாரம் சரியாக செலவினம் மதிப்பீடு தயாரிக்கப்பட வேண்டும். | செலவின விடயங்களில் 5 சதவீதத்திற்கு மேற்பட்ட சதவீதமொன்றை சேமிப்பதற்காக மேலதிக செலவினங்களை |

| | | |
|---|---|---|
| பின்னரும் ரூபா 1,299.19 மில்லியன் தொகை சேமிக்கப்பட்டிருந்தது. | | செய்யாதிருந்தமை போன்றவற்றின் காரணமாக தாக்கமளித்திருந்தது |

**2.3 முற்பணம் வழங்குதலும் தீர்த்தலும்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிதிப் பிரமாணம் 371(2)(இ) இன் பிரகாரம் முற்பணம் உரிய பணி நிறைவுபெற்றதும் உடனடியாக தீர்க்கப்பட வேண்டிய போதிலும் ரூபா 50,000 தொகையான 04 முற்பணங்களை தீர்ப்பதற்கு முற்பணம் பெறப்பட்ட திகதி முதல் 42 நாட்கள் முதல் 114 நாட்கள் வரையான கால வீச்சினை எடுத்திருந்தது. | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | செலவினங்களின் தன்மை மற்றும் பட்டியல்களை சேகரிப்பதில் உள்ள தாமதம் என்பவற்றினால் முற்பணம் தீர்த்தலிலும் தாமதம் ஏற்பட்டிருந்தது. |

**2.4 வைப்பு மீதி**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 05 வெளிக்கள உத்தியோகத்தர்கள் ஏனைய சேவைகளுக்கு செல்கின்றமையினால் அந்த உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்ட மோட்டர் சைக்கிள்களுக்காக அறவிடப்பட்ட ரூபா 696,500 தொகையான பணம் தேசிய பாதீட்டு திணைக்களத்திற்கு அனுப்பப்படாமல் 2018 ஒக்டோபர் முதல் பொது வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. | இந்தப் பணம் தேசிய பாதீட்டு திணைக்களத்திற்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | அந்த உத்தியோகத்திரின் மோட்டார் சைக்கிள் வாடகைக் கொள்வனவு பதிவேட்டிலிருந்து அகற்றுவதற்காக சுற்றறிக்கையின் பிரகாரம் தகவல்களுடன் தேசிய பாதீட்டுத் திணைக்களத்திற்கு அனுப்பப்பட வேண்டும். அந்த உத்தியோகத்தர்களின் தகவல்களை கோரியிருந்த போதும் இது வரையிலும் கிடைத்திருக்காமையால் பொது வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 பெறுகைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| (அ) திணைக்களத்தின் பிரதான அலுவலகக் கட்டிடத்தின் 06 ஆம் பிரிவை நவீனமயப்படுத்துவதற்காக தனியார் ஒப்பந்தகாரர் ஒருவருக்கு கையளிக்கப்பட்டிருந்தது. ஒப்பந்தக்காரருக்கு கொடுப்பனவுகளைச் செய்யும் போது இணங்கப்பட்ட உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்ட நியமத்தின் பிரகாரம் பூர்த்தி செய்யப்படாத பணிகளுக்காக ரூபா 332,151 தொகையும், முழுமையாக நிறைவேற்றப்படாத பணிகளுக்காக ரூபா 1,132,748 தொகையும் ஆக மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | உடன்படிக்கையின் மூலம் இணங்கப்பட்ட முறையில் செயற்பாடுகள் பூர்த்தி செய்யப்பட்டதை உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் சரியான அளவிடையின் அடிப்படையில் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்ள முடியாது. தொழில்நுட்ப உத்தியோகத்தரின் உறுதிப்படுத்தலின் அடிப்படையில் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்ததுடன் 2018.12.31 ஆம் திகதிக்கு முன்னர் திணைக்களத்தின் தேவையின் அடிப்படையில் தேவையான திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டது. கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களத்தினால் தகைமை பெற்ற மற்றும் ஏற்றுக் கொள்ளப்பட்ட தொழில்நுட்ப உத்தியோகத்தர் ஒருவரை ஈடுபடுத்தும் அடிப்படையில் ஏற்றுக் கொள்ளப்பட்டதுடன் ஏதாவது மேலதிகமாக கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கு மாயின் மீண்டும் தொழில்நுட்ப மதிப்பீடொன்றை மேற்கொண்டு நிறுத்தி வைக்கப்பட்டுள்ள பணத்திலிருந்து அறவிடப்படும். |
| (ஆ) திணைக்களத்தின் தகவல் தொழில்நுட்ப பிரிவை நவீனமயப்படுத்துவதற்கான பட்டியல்களைத் தீர்க்கும் போது கணிப்பீட்டு வழுவின் காரணமாக ரூபா 122,939 தொகை மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்தது. | கணிப்பீடு செய்யும் போது சரியாக உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் நட்டத்திக்கு பொறுப்பானவர்களிடமிருந்து அறவிடல் வேண்டும். | அந்தக் கொடுப்பனவுகள் கணிப்பீட்டு வழுவாகும். வழங்குனர்களிடமிருந்து நிறுத்தி வைக்கப்பட்ட பணத்தை மீண்டும் செலுத்தும் போது அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (இ) அரசாங்க கணக்காய்வுப் பிரிவு, உள்ளக கணக்காய்வுப் பிரிவு மற்றும் முரண்பாடுகள் மற்றும் பங்களிப்புப் பண பிரிவுகளுக்காக | நட்டமொன்று ஏற்பட்டிருக்குமாயின் மீண்டும் அறவிடப்பட வேண்டும். | குறித்த அளவை விட கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருக்குமாயின் மீண்டும் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

வழிப்பதனாக்கி இயந்திரங்களை கொள்வனவு செய்து பொருத்தும் போது உடன்படிக்கையின் பிரகாரம் நிறைவேற்றப்படாத பணிகளுக்காக ரூபா 114,954 தொகை மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்தது.

**3.2 நட்டம் மற்றும் இழப்பு**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் மேலும் அறவிட வேண்டியிருந்த மேலதிகாமாக செலுத்தப்பட்ட ஓய்வூதிய மீதி ரூபா 591 மில்லியனாக காணப்பட்டது. இந்த மீதி 10 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் முதல் கொண்டு வரப்பட்ட ரூபா 8 மில்லியனையும் 5 வருடங்கள் முதல் 10 வருடங்கள் வரையான காலம் முதல் கொண்டுவரப்படுகின்ற ரூபா 37 மில்லியன் தொகையும் மற்றும் 5 வருடங்களுக்கு குறைவான காலத்தையுடைய ரூபா 546 மில்லியன் தொகையும் உள்ளடக்கியிருந்தது. | ஓய்வூதியம் மேலதிகமாகச் செலுத்தப்பட்டமை தாமதமின்றி அறவிடுவதற்கான முறைமை மற்றும் கட்டுப்பாட்டுத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட வேண்டும். | பதிலளிக்கப்படவில்லை. |
| (ஆ) | இழப்பு மற்றும் நட்டப் பதிவேட்டில் குறிப்பிடப்பட்ட 2017 திசெம்பர் 31 ஆம் திகதியில் இறுதி மீதி மற்றும் 2018 சனவரி 01 இன் ஆரம்ப மீதி என்பவற்றை ஒப்பீடு செய்த போது 444 பிரதேச செயலகங்களில் இணக்கமின்மைகள் அவதானிக்கப்பட்டன. | கடந்த ஆண்டில் இறுதி மீதி மீளாய்வாண்டின் ஆரம்ப மீதியாக இருக்க வேண்டும். | பிரதேச செயலகங்களினால் அனுப்பப்படுகின்ற காலாண்டு அறிக்கைகளில் சில சந்தர்ப்பங்களின் போது 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதியும் 2018 சனவரி 01 ஆம் திகதியில் உள்ளவாறான மீதியும் இணங்காதிருந்த சந்தர்ப்பங்கள் காணப்பட்டன. இது |

| | | |
|---|---|---|
| | | தொடர்பாக விசாரணை செய்து வேறுபாடுகளை இனங்கண்டு சீராக்கங்களைச் செய்து 2018 ஆம் ஆண்டின் இறுதியின் போது இழப்பு மற்றும் நட்டப் பதிவேடு தயாரிக்கப்பட்டுள்ளது. அதனால் மேற்கூறப்பட்ட வேறுபாடுகள் காணப்பட்டது. |

**3.3 முகாமைத்துவ செயற்பாடுகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) தெரிவுப் பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்டதன் பிரகாரம் அரச நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 06/2006 இன் பிரகாரம் ஓய்வூதியம் திருத்தம் செய்யப்படாத 06 பிரதேச செயலகங்களில் 669 கோவைகள் காணப்பட்டன. | சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | திருத்தங்களையும் முரண்பாடுகளையும் நீக்குவதற்காக தேவையான தகவல்கள் கிடைத்ததன் பின்னர் அந்த திருத்தங்களை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக பிரதேச செயலாளர்களினால் அறிவிக்கப்பட்டுள்ளது. |
| (ஆ) கம்பஹா பிரதேச செயலகத்தில் ஓய்வூதிய கோவைகளை வைப்பதற்காக புதிதாக அமைக்கப்பட்ட ஆவண கூடம் 2018 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் பயனற்றுக் காணப்பட்டதுடன் அலுவலகத்திற்குரிய 11,000 கோவைகள் அளவில் போதியளவான பாதுகாப்பு இன்றி முறையற்ற வகையில் பழைய ஆவணக்கூடத்தில் வைக்கப்பட்டிருந்தது. | சொத்துக்கள் வினைத்திறனாக பயன்படுத்தப்பட வேண்டும். | புதிய ஆவணக்கூடத்தில் கோவைகளை வைத்தல் இறுதிக் கட்டமாகக் காணப்படுவதாக பிரதேச செயலாளரினால் அறிவிக்கப்பட்டது. |
| (இ) தெரிவுப் பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்டதன் பிரகாரம் 06 பிரதேச செயலகங்களில் கோவைகள் இல்லாத 512 ஓய்வூதியக்காரர்ளுக்கு ஓய்வூதியம் செலுத்தப்படுகின்றது. | ஓய்வூதியம் செலுத்தப்படுகின்ற சகல ஓய்வூதியக் காரர்களுக்கும் உரிய ஆவணங்களை உள்ளடக்கிய | கோவை இல்லாத ஓய்வூதியக் காரர்களுக்காக தகவல்களைப் பெற்று ஓய்வூதிய சுற்றறிக்கை 13/2001 |

| | | | |
|---|---|---|---|
| | | ஓய்வூதியக் கோவையொன்று பேணிச்செல்லப்பட வேண்டும். | இன் படி தற்காலிக கோவைகளை தயாரித்து அங்கீகாரத்துக்கு அனுப்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக பிரதேச செயலாளர்களினால் அறிவிக்கப்பட்டுள்ளது. |
| (ஈ) | நீர்கொழும்பு பிரதேச செயலகத்தில் 54 ஓய்வூதியக் காரர்களுக்காக தயாரிக்கப்பட்ட தற்காலிக கோவைகள் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டு அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. மேலும் ஓய்வூதியத் தரவு முறைமையின் பிரகாரம் பிரதேச செயலக எல்லைக்கு வெளியே வசித்து வரும் 23 ஓய்வூதிக்காரர்களுக்கு நீர்கொழும்பு பிரதேச செயலகத்திலிருந்து ஓய்வூதியம் வழங்கப்பட்டிருந்தது. | தற்காலிக கோவை ஓய்வூதிய திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டு அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட வேண்டும். | பிரதேச செயலகத்திற்கு வெளியேயுள்ள ஓய்வூதியக் காரர்களின் ஓய்வூதியம் தற்காலிகமாக நிறுத்தப்பட்டிருந்தது டன் கோவைகளை அங்கீகரித்து முறையான பிரகாரம் மாற்றுவதற்கு தேவையான ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. |
| (உ) | தெரிவு பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்ட பிரகாரம் ஓய்வூதியம் செலுத்தும் தரவு முறைமையில் தேசிய அடையாள அட்டை இலக்கம் இன்றிய நீர்கொழும்பு, மீரிகம, கம்பஹா, அலவ்வ, வரக்காபொல, வத்தளை போன்ற பிரதேச செயலகங்களில் ஓய்வூதியம் செலுத்துதல் மேற்கொள்ளப்பட்ட 99 சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன. | வருடாந்த உயிர்வாழ்வுச் சான்றிதழ் பெற்றுக்கொள்ளும் சந்தர்ப்பத்தின் போது அல்லது தேசிய அடையாள அட்டை இலக்கம் தரவு முறைமையில் உள்ளடக்கப்பட வேண்டும். | ஓய்வூதியக் காரர்களின் தேசிய அடையாள அட்டை தயாரிப்பதற்காக கிராம உத்தியோகத்தர்கள் மூலம் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாக பிரதேச செயலாளர்களினால் அறிவிக்கப்பட்டுள்ளது. |

## 4. மனித வள முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ஓய்வூதிய உத்தியோகத்தர்கள் மற்றும் ஆவண உதவி உத்தியோகத்தர்கள் என்பவர்களுக்காக வருடாந்த | நீண்டகாலம் இடமாற்றம் பெறாது இருப்பது | இடமாற்றக் கொள்கை அமுல்படுத்தும் போது உத்தியோகத்தரின் தேவையினைப் போன்று திணைக்களத்தின் தேவை |

| | | |
|---|---|---|
| இடமாற்றக் கொள்கையின் பிரகாரம் ஒரே சேவை நிலையத்தில் 05 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் பூர்த்தி செய்துள்ள உத்தியோகத்தர்கள் கட்டாயமாக இடமாற்றம் செய்யப்பட வேண்டியிருந்த போதிலும் திணைக்களத்தின் பிரதான அலுவலகத்தில் சேவையில் ஈடுபட்டிருக்கின்ற 08 உத்தியோகத்தர்களுக்கு 10 வருடங்களுக்கு மேற்பட்ட சேவைக் காலமும் 11 உத்தியோகத்தர்கள் 06 வருடம் தொடக்கம் 10 வருடங்களுக்கு இடையிலான சேவைக்காலமும் சேவையாற்றியிருந்த போதிலும் அந்த உத்தியோகத்தர்களுக்காக இடமாற்றம் வழங்கப்பட்டிருக்க வில்லை. | நிதி மோசடிகள் ஏற்படுவதற்கு காரணமாக இருந்தது. | தொடர்பாக கவனத்தில் கொள்ளப்பட்டுள்ளது. ஓய்வூதியம் செலுத்தும் நடைமுறைகள் பன்முகப்படுத்தும் பிரதான அலுவலகம் மூலம் மேற்கொள்ளப்படுகின்றமையால் ஓய்வூதியம் தொடர்பான அனுபவம், உத்தியோகத்தர்களின் சேவை தேவையாக இருந்தமையால் ஓய்வூதியம் செலுத்தும் நடைமுறைகளுக்காக பாரியளவான பங்களிப்பை வழங்குகின்ற நம்பிக்கை வைத்துள்ள உத்தியோகத்தர்களின் சேவை தேவையின் அடிப்படையில் உள்ளக நிலைய இடமாற்றல் வழங்குதல் அல்லது பிரிவு முக்கியத்துவத்தின் அடிப்படையில் பிரதான அலுவலகத்தில் நிறுத்தி வைக்கப்படுகின்றனர். அவ்வாறே நிறுவனத்தின் நிலைமையில் ஒழுக்காற்று நடவடிக்கைகளுக்கு உரிய மற்றும் எந்தவொரு முறைமையிலோ அல்லது சேவையை முடிவுறுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்ட உத்தியோகத்தர் களுக்கும் இடமாற்றம் வழங்கப்படுவதில்லை. |